திரு. எம். ஏ. லத்தீப்: இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குழு இந்தத் தொழிலில் இருக்கிற பல்வேறு பிரச்னைகளை முறையாக ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை கொடுப்பதற்கு சிறிது காலம் ஏற்படும். ஆகவே இடைக்கால நிவாரணமாக இந்தக் குழுவின் அறிக்கை கிடைப்பதற்கு முன்பே இடைக்கால நிவாரணமாக அரசாங்கம் ஒரு முடிவு எடுத்து அதற்காக ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து போதிய கூலி நிர்ணயம் செய்ய வேண்டிய வழிவகைகளை இந்த அரசு ஏற்படுத்தித் தருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 1948-ம் ஆண்டு குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தில் அதற்கு வாய்ப்பில்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: இந்த செயற்கை வைரத் தொழிலினால் அரசுக்கு அதிகமான லாபம் உண்டா? அப்படி இல்லை என்றால் அந்தத் தொழிலை அரசுடைமையாக்க அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கேள்வி குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிப்பது பற்றியது.

திரை அரங்குகளில் பணியாற்றுவோருக்கு படிகள்.

*வினா எண்—114 திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தினசரி 4 காட்சிகள் காட்டப்படும் சென்னை நகர திரைப்பட அரங்குகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான படித்தொகையும் வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) 8 மணி நேர வேலை என்பது திரை அரங்கில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குப் பொருந்துமா?

(இ) ஆம் எனில் அந்த உரிமை வழங்க மறுக்கும் திரை அரங்கு உரிமையாளர்கள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) தினசரி 4 காட்சிகள் காட்டப்படும் சென்னை நகர திரை அரங்குகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு படித்தொகைகள் (daily batta) வழங்கப்படுகின்றன.

(ஆ) 8 மணி நேர வேலை என்பது திரை அரங்குகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் பொருந்தும்.

1979 நவம்பர் 5]

(இ) வேலை நேரத்தைப் பொறுத்த அளவில் ஆய்வு செய்த சமயங்களில் எந்தவிதச் சட்ட மீறல்களும் காணப்பட வில்லை. 8 மணி நேரத்திற்கு மேல் பணிபுரிய அனுமதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு மிகை நேர ஊதியம் வழங்கப்படுகிறது. மிகை நேர ஊதியம் வழங்காமல் வேலை வாங்குதல் போன்ற சட்டமீறல்கள் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்ள ஆய்வாளர் கள் திரை அரங்குகளில் திடீர் ஆய்வுகள் நடத்தி வருகின்றனர்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: சென்னை நகரில் தினசரி நான்கு காட்சிகள் நடைபெறுகிற தியேட்டர்களில் உள்ள தொழிலாளர்களுக்கு சரியான பாதுகாப்பு இல்லை என்பதை முதலாவதாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சா அவர்கள் தெரிவித்ததைப் போல் எட்டுமணி நேர வேலை என்பது சென்னை நகரில் உள்ள எந்தத் தியேட்டரிலும் கைக்கொள்ளவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். 12 மணி நேரம், 14 மணி நேரம் வேலை செய்கிறார்கள். காலை 10-30 மணிக்கு வந்தால் ஏறத்தாழ இரவு 12-30 மணி வரை வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு இடையில் மூன்று மணி நேரம்தான் ஓய்வு கிடைக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் சென்னையில் உள்ள நிலைமையை விளக்குகிறார்களா அல்லது துணைக் கேள்வி போடுகிறார்களா?

திரு. சென்னை மு. அரங்கநாதன்: இதைச் சொன்னால் தான் துணைக் கேள்வி வரும். இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது. பேட்டா என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏறத்தாழ 1 ரூபாயிலிருந்து ரூ. 2.50 வரை தியேட்டருக்குத் தகுந்தாற்போல் கொடுக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இதைப்போக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன? இரண்டாவதாக, இன்று சில குறிப்பிட்ட தியேட்டர்களில் மாதக்கணக்கில் வாடகைக்கு விட்டு விடுகிறார்கள். குறிப்பாக சொல்லப் போனால் அலங்கார், தேவி தியேட்டர்கள் போன்றவைகளை மாதம் ஒன்றுக்கு ரூ. 80,000-க்கு வாடகைக்கு விட்டு விட்டு அதிலிருக்கிற தொழிலாளர்களை கூலிகளைப் போல் விநியோகஸ்தர்கள் மூலம் அவர்களுக்கு சம்பளம்கொடுக்கக் கூடிய நிலையை உருவாக்கி சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள், இந்த நிலை அரசுக்குத் தெரியுமா ?

திரு. சென்னை மு. அரங்கநாதன்: அடுத்தபடியாக, திரைப்படக் கொட்டகை உரிமையாளர்கள் அங்கிருக்கிற டீ ஸ்டால், சைக்கிள் ஸ்டாண்ட் போன்றவற்றை பினாமி பெயரால் நடத்திக் கொண்டு அங்குள்ள தொழிலாளர் களைப் பழி வாங்குகிறார்கள். அதுவும் அரசுக்குத் தெரியுமா? இது குறித்து என்ன நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறது அரசு?

[1979 நவம்பர் 5

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கேள்வி வேலை நேரம், அதையொட்டிய படி, ஓவர்டைம் அலவன்ஸ் பொறுத்தது. சென்னையில் உள்ள திரையரங்குகளில் அப்படிக் கொடுப்பதில்லை அதிக நேரம் வேலை செய்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இதை மனதில் வைத்து அதற்கு வேண்டிய சர்ப்ரைஸ் செக்ஸ், திடீரென்று சோதனை செய்வதற்கு தீவிர மான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மற்றக் கேள்விகளுக்கு பதில் தேவை இல்லை என கருதுகிறேன், மூலக் கேள்விக்கு சம்பந்த மில்லையென்பதால்.

திரு. எம். அண்ணாமலை ; தலைவர் அவர்களே, திரையரங்குகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு குறிப்பிட்டுள்ள வேலை நேரத்தை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்' இது சென்னை மாநகரத்திற்கு மட்டும்தான் பொருந்துமா அல்லது மாநிலம் முழுவதிற்கும் பொருந்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, சினிமா தியேட்டர்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் ஷாப் அன்ட் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்டின் கீழ் வருகிறார்கள். ஆகவே இது தமிழ்நாடு முழுவதும் பொருந்தும்.

திரு. நா. சுந்தரராஜ் ; தலைவர் அவர்களே, இப்போது டெவலப்பிங் நேஷனை ஏற்படுத்த முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இன்றைக்கு பாதிப் பேர் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் மக்களை இன்னும் சோம்பேறியாக்குகின்ற 10 மணி காட்சிகளை நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கைஎடுக்குமா? வீட்டில் கணவன்மார்களை ஏமாற்றிக்கொண்டு பெண்கள் சினிமா பார்க்கவந்து விடுகிறார்கள் ஆகவே இந்த பத்து மணி காட்சியை நிறுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

The Hon. Thiru S. RAGAVANANDAM : The hon. Member has dialled a wrong number.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இதையும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையில் பல தியேட்டர்கள் மாதவாடகை 80 ஆயிரம் ரூபாய் அளவுக்கு விட்டுக்கொண்டு அதில் வேலை செய்யும் தொழிலாளர்களை தொழில் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொண்டு, தொழிலாளர்களையும் பழி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். தினக்கூலிகளைப்போல் அவர்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியென்றால் இந்த நிலைமையை அரசு தீவிரமாக பரிசீலித்து இப்படிப்பட்ட தொழிலாளர்களைப் பாதுகாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதிலுள்ள மூலக்கேள்வி நான் ஏற்கனவே சொன்னதைப்போல், வேலை நேரம், அதையொட்டிய ஓவர் டைம், பேட்டா கொடுப்பது இவைகளைப் பற்றியது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற எல்லாவற்றையும் மனதில் கொண்டு தக்க நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யும்.

நலத்துறைப் பள்ளிகள்

* வினா எண் 115 — திரு. இரா. தாமரைக்கனி, திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அரிசன நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளை, கல்வித்துறைக்கு ஒப்படைத்து, அப்பள்ளிகளின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தவும், கல்வித்தரத்தை உயர்த்தவும் அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) அரிசன நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளை கல்வித்துறைக்கு மாற்றும் உத்தேசம் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசனத்துறையால் நடத்தப்படுகின்ற பள்ளிகள் சரியான முறையில் இயங்குவது கிடையாது. கட்டிடங்கள் கிடையாது. கட்டிடங்கள் இருப்பதும் மாட்டுக்கொட்டகை போல் இருக்கிறது. மேலும் அங்கே பெஞ்சு போன்றவைகள் கிடையாது. ஆகவே இந்தப் பள்ளிகளை நல்ல முறையில் நடத்தவும், கல்வியின் தரத்தை உயர்த்தவும் அரசு உடனடியாக பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக மாவட்டக் கல்வி அலுவலர் ஒருவரையும், ஆய்வாளர்களையும் நியமிக்க பரிசீலனை செய்து வருகிறோம். மேலும் பள்ளிக் கட்டிடங்கள் மாட்டுக்கொட்டகைப்போல் இருக்கின்றன என்றுசொன்னார்கள். பல பள்ளிகளில் நிரந்தரக் கட்டிடம் கட்டப்பட்டு இருக்கிறது. மேலும் நிதிநிலைமையின் காரணமாக நிரந்தரமான கட்டிடங்களாக மாற்றுவதற்கு தற்போது சூழ்நிலை இல்லை.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி வாசனையற்றிருந்த காலத்தில், தீண்டாமைக் கொடுமை கடுமையாக இருந்த நேரத்தில் அரிசனப் பள்ளிகள் தனியாக இருக்க வேண்டும் என்ற நிலை இருந்தது. இப்போது ஊரெல்லாம் பள்ளிகள் ஏற்பட்டிருக்